## சிறுவர் வறுமையிலான செயற்பாட்டாளர் ஆய்வுச் சுருக்கம்

கே.யூ.ஆர். விஜயதிலக

### சுருக்கம்

இவ்வாய்வின் குறிக்கோள் பெருந்தோட்டத்துறை சிங்கள மற்றும் தமிழ் தொழிலாளர்களின் குழந்தைகளால் முகம் கொடுக்கப்படும் பிரச்சினைகளை இனம் காண்பதும் இப்பிரச்சினைகளிற்கு ஏதுவான காரணங்களை அதே போல் சில தீர்வுகளை அடையாளம் காண்பதுமாகும். சுகாதாரம் மற்றும் போசனை, கல்வி, பாதுகாப்பு, உள ஆரோக்கியம், பொருளாதாரம் மற்றும் குடும்ப, சமூக பிரச்சினைகள் இக்கற்கையில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட விடயங்களினை ஆய்வு செய்வதனூடாக அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டன. இவற்றில் சமுதாய நோக்குகளின் மாற்றம் மற்றும் இம்மாற்றத்திற்கு உதவக்கூடிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், சிறுவர் நலனினை முன்னேற்றுவதற்கு குடும்ப அலகுகளை உருவாக்கல், உலக சிறுவர் தினம் போன்ற விசேடமான தினங்களின் செயற்பாடுகளில் தலைமை தாங்குவதற்கு வறிய குடும்பங்களின் சிறார்களிற்கு தளம் உருவாக்கல், பாடசாலைகள், ஞாயிறுப் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்காக்களினூடாக இவர்களுக்கு உதவியளித்தல் என்பன அடங்குகின்றன. இத்துவக்க முயற்சியின் ஒரு பகுதியாக இம்மாற்றத்தினை உருவாக்க உதவுகின்ற உத்தி மற்றும் பொருத்தமான தனி நபர்களை அடையாளம் காண்பதும் அவசியமாகும். மேலும் இந்நிகழ்ச்சித் திட்டங்களினை மேற்கொள்வதற்கு தேவையான நிதி முதல்களை கண்டுகொள்வதும் முக்கியமாகும்.